(இ) நான்கு அறநிலையங்களுக்கு நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப் பட்டுள்ளனர். ஐந்தாவது அறநிலையத்திற்கும் நிர்வாக அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருக்கிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: ஐயா, ஒரு கோவிலின் பொறுப்பை ஒரு எக்ஸிக்யூடிவ் ஆபீசருக்குக் கொடுத்து, இன்னும் 50 மைலுக்கு அப்பாலுள்ள ஒன்றிரண்டு கோவில்களுக்கும் பொறுப்பு கொடுப்பதால், ஊழல்களும், சிக்கல்களும் ஏற்படுகிறதே, அதைத் தடுக்க இந்த முறையை மாற்ற சர்க்கார் விரைவில் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினருடைய கருத்து யோசனையில் எடுக்கப்படும். கேட்ட கேள்வி ஐந்து கோவில்கள் பற்றியது. அதில் நான்கு கோவில்களுக்கு நியமனம் ஆகிவிட்டது. ஐந்தாவது கோவிலுக்கு ஏற்பாடு செய்யப்படு கிறது என்று தெரிவித்தேன்.

***350 விஞ—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாயூரம் தாலுக்காவிலுள்ள தருமபுரம் மடம், நாகப்பட்டினம் தாலுக்கா சிக்கல், நவநீதேஸ்வரஸ்வாமி ஆலயம் இவைகளுக்கான சொத்துப் பதிவேடுகள் 1959-ம் வருடத்திய அறநிலையச் சட்டங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நாகப்பட்டினம் தாலுகாவில் சிக்கலிலுள்ள நவநீதேஸ்வரர் தேவஸ்தானம் சம்பந்தமான சொத்துக்களின் பதிவேடு தயாரிக்கப்பட்டு 1951-ம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட விதித்துறைகளின் கீழ் ஒப்புதல் பெற்றது. தரும புரத்தில் உள்ள தருமபுரம் மடத்தைப் பொறுத்தவரையில், அதன் சொத்துக்களின் பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு இன்னும் ஒப்புதல் அளிக்கப்படவில்லை.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஐயா, சொத்துக்களின் விவரங் கள் என்ன? ஏன் ஒப்புதல் பெறவில்லை ? துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தர்மபுரம் ரெஜிஸ்டர் அந்த ஆதீனத்தில் இருக்கிறது. அதை உடனடியாக அளிக்கவேண்டும் என்று துணை கமிஷனர் உத்தரவு போட்டிருக்கிறார்கள். விரைவில் அதைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

சுவர்ணபுரீஸ்வரர் கோயில், சித்தாய்மூர்

***351 விஞ—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தாலூக்கா, சித்தாய்மூர் சுவர்ணபுரீஸ்வரர் ஆலயத்தில் நிர்வாக அலுவலர் ஏராளமான நகைகளைக் கையாடல் செய்ததாக 1966-ஆம் ஆண்டில் மேற்படி கிராம மக்களிடமிருந்து வந்த புகாரின் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த ஆலய நிர்வாக அதிகாரிக்கெதிராக குற்றச்சாட்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. குற்றங்களுக் கான விசாரணை முடிவடையும் வரை அவர் தற்காலிகமாய் வேலையிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளார்.

திரு கொ. இர. ஞானசம்பந்தன் : ஐயா, சென்ற ஆட்சியில் அவர்களுக்கு நெருங்கியவர் என்ற காரணத்தால், குற்றம் கண்டு பிடிக்கப் பட்டும் கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, தள்ளி வைக்கப்பட்டது. இப்பொழுது அப்படி மிஸப்ரோப்ரியேஷன் செய்த சொத்துக்களை ரெகவர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ? அவர் மேல் கிரிமினல் வழக்குத் தொடர எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?

1967 ஜூலை 15]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் குறிப்பிடும் விவரங்கள் எனக்குத் தெரியவில்லை. குறிப்பிட்டவர் ரூபாய் 13,533·94 அளவில் கணக்குகளைக் காட்டவில்லை என்று அதன் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் அவர் ஸஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். விசாரணை நடக்கிறது.

மதுரையில் மற்றும் ஒரு கல்லூரி

*352 வினா—**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நகரத்தில் உள்ள சௌராஷ்டிரா சமூகக் கல்வி ஸ்தாபனத்தார்களிடமிருந்து மதுரை நகரில் மற்றொரு கல்லூரி ஆரம்பிக்க அனுமதி கோரி விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தொடங்கக் கருதியுள்ள புதிய கல்லூரிக்கு மதுரைப் பல்கலைக்கழகம் இணைப்பு வழங்கியதும் தேவையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 353, 354, 355 தள்ளிவைக்கப்படுகின்றன.

கிணறு வெட்ட மானியம்

*356 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :**
திரு டி. எஸ். ஆதிமூலம் : } மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிணறுகள் வெட்ட விவசாயிகளுக்கு சப்சிடி, லோன் முதலியன எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

(இ) எந்த ஆண்டு முதல் தரப்பட்டு வருகிறது ?

(உ) ஜில்லாவிற்கு ஜில்லா மாறுதல் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) தற்போதுள்ள ஆணைகளின் படி புதிய கிணறுகள் மானியத்திட்டத்தின் கீழ் கிணறு ஒன்றுக்கு அதிக அளவு ரூபாய் 5,000 கடன் வழங்கப்படுகிறது. கிணறு வெட்டுவதற்கு ஆன செலவில் ரூபாய் 500 க்கு மேற்படாமல் 25 சத வீதம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

(இ) புதிய கிணறுகள் மானியத் திட்டம் 1946-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(உ) இல்லை, கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த தாளவாடி பிர்க்காவில் மட்டுமே, கிணறு வெட்டுவதற்கான செலவில் 50 சதவீதம் உதவித் தொகையாக (அதிக அளவு ரூபாய் 1,500-க்கு மேற்படாமல்) வழங்கப்படுகிறது.

திரு. என். சங்கரய்யா : மாநில அரசு 11 லட்சம் டன் அளவிற்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்கிற திட்டத்தைக் கொண்டு இருப்பதால், அந்த வகையில் கிணறுகளும் அதிகப்பட வேண்டும் என்று, கிணறுகளுக்கு அதிகப்படியான உதவிகள் கொடுக்க யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1967–68-ம் ஆண்டில் 300 கிணறுகள் வெட்ட அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று, கூடுதலான தொகைகள் கொடுக்கப்படவேண்டும் என்று மத்திய சர்க்காரிடம் ரூ. 20 கோடியளவு உதவி கேட்டிருக்கிறோம். அவர்கள் ரூ. 5 கோடி கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இருபது கோடி கட்டாயம் கொடுத்தால் கனம் அங்கத்தினர் யோசனையை முழுமையாகச் செயல்படுத்தலாம். இல்லாவிடில் கிணறுகள் எண்ணிக்கை குறையும்.